# எம். கே. முத்துசாமியின் கிராமிய உலகம்

இந்திரன்



அண்மையில் நியூயார்க் பல் ...லைக் கழகத்தில் கலைப் ...ப்பு சம்பந்தப்பட்ட பிரி... இயக்குநராகப் பணியாற் ... உலகப் புகழ்பெற்ற சிற்பி ... அச்சுப்பதிவு மேதையு ... டாக்டர் கிருஷ்ணாரெட்டி ...க்கு எழுதிய கடிதமொன் ... கீழ்க்கண்டவாறு குறிப்பிடு ...ர்:

"...ரு உண்மையான கலை ... ஆழமான உணர்வு ...ாடும் புரிதல்களோடும் ...னை ஈடுபடுத்திக்கொள் ...ன். இந்த வகையில்தான் ...னது கலை மிகவும் முக்கிய ...தாகவும், அர்த்தமுள்ள ...வும் ஆகிப்போகிறது. ...ால் இது இல்லாத நிலை ... மேல் நாட்டுக்கலையை ...ும் அறிவார்ந்த நிலையில் ... செய்வது என்பது கலை ... மேல் விளிம்பை மட்டுமே ...டச் செய்துவிடுகிறது. ... வகையில் மேல்நாட்டுக் ...லையை அப்படியே எதிரொ...பது என்பது ஒரு நடிப்பாக ... கபடத் தன்மை கொண்ட...வும் ஆகிவிடுகிறது''

...ரீசிலும், லண்டனிலும், ...ன்றிமூர், சாட்கின், டபிள்யு ... ஹெய்டர் போன்ற மேல் ...டுக் கலை மேதைகளுடன் ...ாண்டுகள் பணியாற்றிய ...வர் இத்தகைய வார்த்தை ...ளச் சொல்கிறபோது, இங் ...ள பல ஓவியர்கள் மேலை நாட்டுக் கலையை வான் கோழித்தனமாக நகல் செய்யும் வெற்று வேடதாரிகளாக முடிந்து போகின்ற சோகத்தைப் போக்கும் ஒருசில ஓவியர்களில் எம்.கே. முத்துசாமியும் ஒருவர்.

சேலத்தில் பிறந்த 58 வயது நிரம்பிய இந்த ஓவியரின் அண்மைக்கால ஓவியங்கள் புதிய உத்தி முறையையும், நடையையும் கொண்டவை. சென்னை ஓவியக்கல்லூரியில் ஓவியப் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்றவரான இவர் கவிஞர்கள் யாப்பிலக்கண விதிமுறைகளை மீறும் சுதந்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டது போல, ஓவியப் படிப்பில் கற்றுக் கொடுக்கப்படும் கலை விதிமுறைகளை மீற முடிவெடுத்தார். இதனால் தனது கித்தானில் இவர் சுயவெளிப்பாட்டு உருவங்களை முதலில் வரைந்து கொண்டு பின்னர் அவற்றைப் பல பிரிவுகளாகப் பிரிக்கிறார். பிறகு அக்ரிலிக் அல்லது நீர்வண்ணங்களை சிறுசிறு புள்ளிகளாக கித்தானில் வைக்கிறார். பிறகு செய்திகள் அச்சிடப்பட்ட பழுப்புநிற செய்தித்தாளை அவற்றின் மீது இருக்கும் அச்சிட்ட எழுத்துக்களின் அமைப்புக்கு ஏற்ப வெட்டி கித்தானின் மீது வண்ணம் பூசப்பட்ட பகுதிகளின் மேலேயே ஒட்டிவிடுகிறார். அது ஈரமாக இருக்கிற போதே தனது நகங்களால் அவற்றை அங்கங்கே கீறிவிட்டு விடுகிறார். இப்போது செய்தித்தாளுக்குக் கீழே வைக்கப்பட்ட வண்ணங்கள் கசிந்து செய்தித்தாளுக்கு மேலே வருகின்றன. பெர்ஷியன் நீலம், ஐவரி கருப்பு யெல்லோ ஆக்கர், வெர்மிலியன் சிவப்பு போன்ற வண்ணங்களினால் கான்வசில் பிரிக்கப்பட்ட பகுதிகளின் ஓரங்களைக் கண்ணாடி சன்னல்களின் மூலம் ஒளி ஊடுருவி வருவது போல அமைக்கிறார்.

தூக்கியெறியப்படும் செய்தித்தாள்களின் பின்னணியில் இவர் குறிசொல்பவர், கரகாட்டக்காரர், சிலம்பாட்டக்காரர் பறை அறைபவர் போன்ற சாதாரணர்களை தைல வண்ணத்தில் தீட்டுகிறார்.

இப்படி தீட்டப்பட்ட இவரது ஓவியங்கள் புதுமையான உத்தி முறையும், மக்களைப் புறக்கணிக்காத கருப்பொருளையும் கொண்டு விளங்குகின்றன. இந்த உத்திமுறை மிகவும் சிக்கலானது என்கிற காரணத்தால் இவரது ஓவியங்களைச் செய்து முடிப்பதற்கு நீண்ட நேரமாகிறது. இவ்வளவு நேரத்துக்கு அந்த ஓவியத்திற்கான உணர்வெழுச்சி ஆவியாகி விடாமல் இருக்கக்கூடிய ஆழங்கொண்டதாக இருக்க வேண்டியதாகிறது. இவர் படைத்துக் காட்டும் மனிதர்களின் விழிகள் வெள்ளை வண்ணத்தின் நடுவில் ஒரு சக்கர ஆரக்கால்களைக் கொண்டது போல அமைகின்றன.

தனது கிராமத்து வீடுகளின் சுவர்களில் அடுப்புக்கரித் துண்டுகளினால் சித்திரங்கள் வரைந்து கொண்டிருந்த இந்தச் சிறுவர் ஒரு முறை தனது 15வது வயதில் வீட்டை விட்டு ஓடி வந்து சுகுணவிலாஸ் சபாவில் நாடக நடிப்புக்காகச் சேர்ந்த வரை மீண்டும் ஓவிய உலகம் சென்னைக்கு ஓடிவரச் செய்தது. ஓவியத்திற்காகத் தனது கிராமத்தைத் துறந்து ஓடிவந்த இந்த ஓவியர். உண்மையில் கிராமத்தைத் துறந்தாரா என்றால் இல்லை. இவரது கிராமமும், அதன் மனிதர்களும் இன்னமும் அவரது கித்தானைப் பிடித்து ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர்.

இவரது படைப்புகள் வண்ண ஓவியங்களாக இருந்தாலும், அவை ஆழமான வரை கலையை அடிப்படையாகக் கொண்டது. சொல்லப் போனால், செய்தித்தாள்களின் எழுத்தை இவர் வண்ணங்களில் ஒன்றாகவே சேர்த்துப் பயன்படுத்துகிறார். எழுத்தும், வரைகலையும் இல்லையென்றால் இவரது இன்றைய உத்தி முறை தனது ஆயுதங்களை இழந்ததாகிவிடும் என்றே சொல்லலாம்.

தனது ஓவியக்கல்லூரிப் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டாலும் கூட ஓவியர் முத்துசாமியின் தூரிகை இன்னமும் சுறுசுறுப்பாகவே செயல்பட்டு வருகிறது. புதிய சிகரங்களைத் தொடும் அதனது தாகம் இன்னமும் தீரவில்லையென்றே சொல்லலாம்.



தமிழோசை பதிப்பகத்திற்காக, தமிழோசை அச்சகத்திலிருந்து அச்சிடுபவர் — வெளியிடுபவர் — ஆசிரியர் : ஆண்டாள்.
முகவரி : 84, அபிபுல்லா சாலை, தியாகராயநகர், சென்னை-600017.